සියලු ම හිමිකම් ඇවිරිණි]
All Rights Reserved]

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තු සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තු සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තු සබරගමුව පළාත් අධ්‍යා

**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**தரம் - 11**

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**இஸ்லாம் - I**

நேரம்
3 மணிக்கியாலங்கள்

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. குற்றவியல் சட்டங்கள் அறபியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
   1. முஆமலாத் 3. ஜினாயாத்
   2. முனாகஹாத் 4. இபாதத்
2. பொறுமை அரபியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   1. அஸ்ஸம்உ 3. அல் பத்ஹ்
   2. அல்பரஹ் 4. அஸ்ஸப்ரு
3. ஹல்க் என்பதன் கருத்து யாது
   1. புறத் தோற்றம் 3. ஒழுக்கம்
   2. படைப்பு 4. பண்பு
4. ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள் அல்லாதது
   1. ஸப்ரு 3. தவக்குல்
   2. அழப் 4. ம.்.ரிபா
5. பரிசுத்தம் அடைந்த ஆன்மா எவ்வாறு அழைக்கப்படுகின்றது
   1. கல்புன் ஸலீம் 3. கல்புன் ஹபீப்
   2. கல்புன் ஸகீம் 4. மேற்கூறிய யாவும் பிழையானது
6. இஜ்திஹாதுடன் தொடர்பு பட்ட சொற்பிரயோகம் அல்லாதது
   1. முஜ்தஹித் 3. கியாஸ்
   2. இஜ்மாஉ 4. ஸஹீஹ்
7. ஹதீஸ் எந்த கலீபாவின் காலத்தில் நூலுருப்படுத்தும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.
   1. அபூபக்கர் (ரழி) 3. உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)
   2. முஆவியாக (ரழி) 4. உஸ்மான் (ரழி)
8. இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களது ஹதீஸ் தொகுப்பு நூலானது
   1. முஸ்னத் 3. நஸஈ
   2. முவத்தா 4. திர்மிதி
9. இமாம் முஸ்லிம் (ரஹ்) எங்கு பிறந்தார்கள்
   1. திர்மிதி 3. நைசாபூர்
   2. சிஜிஸ்தான் 4. கஸ்வின்
10. இமாம் முஸ்லிம் (ரஹ்) தனது ஹதீஸ் தொகுப்பில் எத்தனை ஹதீஸ்களை தொகுத்தார்கள்
    1. 7275 3. 4341
    2. 4800 4. 4000
11. .அஸ்ஸிஹாஹுஸ்ஸித்தா வில் உள்ளடங்கும் கிரந்தங்களின் எண்ணிக்கை
    1. 7 3. 6
    2. 5 4. 8
12. முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை நபி (ஸல்) எந்தப் பிரதேசத்துக்கு கவர்னராக அனுப்பினார்கள்
    1. யமன் 3. ஈராக்
    2. ஷாம் 4. ஈரான்
13. ஒரு முஜ்தஹித் இஜ்திஹாத் செய்து அவரது முடிவு சரியாக அமைந்தால் அவருக்கு எத்தனை கூலிகள் உண்டு
    1. 1 கூலி 3. 10 கூலிகள்
    2. 3 கூலிகள் 4. 2 கூலிகள
14. உலுல் அம்ர் எனப்படுவோர் யார்?
    1. தூதர்கள் 3. ஆசிரியர்கள்
    2. தலைவர்கள் 4. நபிமார்கள்
15. இமாம் அபூஹனீபா (ரஹ்) எங்கு பிறந்தார்கள்
    1. மக்கா 3. யமன்
    2. மதீனா 4. கூபா

16. மத்ரஸதுர் ர.்.யு எந்த பிக்ஹு துறை இமாமியச் சிந்தனைப் போக்காகும்.
   1. இமாம் மாலிக் (ரஹ்)
   2. இமாம் அபூஹனீபா (ரஹ்)
   3. இமாம் ஷாபிஈ (ரஹ்)
   4. இமாம் ஹன்பலி (ரஹ்)
17. இமாமுல் மதீனா என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற இமாம் யார்?
   1. இமாம் அபூஹனீபா (ரஹ்)
   2. இமாம் புஹாரி (ரஹ்)
   3. இமாம் ஷாபிஈ (ரஹ்)
   4. இமாம் மாலிக் (ரஹ்)
18. இமாம் மாலிக் (ரஹ்) வின் பிக்ஹ் சிந்தனை எவ்வாறு அழைக்கப்பட்டது
   1. மத்ரஸதுர் ர.்.யு
   2. மத்ரஸதுல் அஸர்
   3. மத்ரஸதுல் ஹதீஸ்
   4. மேற்கூறிய யாவும் பிழையாகும்
19. ஆலிமுல் குரைஷ் என அழைக்கப்பட்ட பிக்ஹ்துறை இமாம் யார்?
   1. ஷாபிஈ (ரஹ்)
   2. ஹன்பலி (ரஹ்)
   3. மாலிகி (ரஹ்)
   4. அபூஹனீபா (ரஹ்)
20. இஜ்திஹாதை அடிப்படையாகக் கொண்ட கலை
   1. ஹதீஸ்
   2. பிக்ஹ்
   3. தப்ஸீர்
   4. தஜ்வீத்
21. இமாம் அபூ ஹனீபா (ரஹ்) பிறந்த ஆண்டு
   1. ஹிஜ்ரி 80
   2. ஹிஜ்ரி 93
   3. ஹிஜ்ரி 150
   4. ஹிஜ்ரி 204
22. பலஸ்தீனில் பிறந்து எகிப்தில் மரணித்த பிக்ஹ் துறை இமாமின் இயற்பெயர்
   1. அஹ்மத்
   2. முஹம்மத்
   3. நு.்.மான்
   4. மாலிக்
23. ஹுலபாஉர் ராஷிதூன்களில் அடங்காதவர்
   1. அலி (ரழி)
   2. உமர் (ரழி)
   3. முஆவியா (ரழி)
   4. அபூபக்கர் (ரழி)
24. நபிகளார் எத்தனையாம் ஆண்டு வபாத்தானார்கள்
   1. ஹிஜ்ரி 10
   2. ஹிஜ்ரி 11
   3. ஹிஜ்ரி 12
   4. ஹிஜ்ரி 13
25. அபூபக்கர் (ரழி) ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு மரணித்தார்கள்
   1. ஹிஜ்ரி 12
   2. ஹிஜ்ரி 13
   3. ஹிஜ்ரி 14
   4. ஹிஜ்ரி 15
26. ஸீறா என்பது
   1. நபிகளாரின் வாழ்க்கை வரலாறு
   2. ஸஹாபாக்களின் வாழ்க்கை வரலாறு
   3. தாபி ஈன்களின் வாழ்க்கை வரலாறு
   4. தப்உத் தாபிஈன்களின் வாழ்க்கை வரலாறு
27. கலீபா என்ற அறபுப் பதம் குறிப்பது
   1. மனிதன்
   2. பிரதிநிதி
   3. உதவியாலன்
   4. துணையாலி
28. அல்குர்ஆனை நூலுருப்படுத்தி பாதுகாக்க ஆலோசனை வழங்கிய ஸஹாபி
   1. அலி (ரழி)
   2. உமர் (ரழி)
   3. உஸ்மான் (ரழி)
   4. ஸைத் இப்னு ஸாபித் (ரழி)
29. உமர் (ரழி) ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு ஆட்சியை பொருப்பேற்றார்கள்
   1. ஹிஜ்ரி 12
   2. ஹிஜ்ரி 13
   3. ஹிஜ்ரி 114
   4. ஹிஜ்ரி 15
30. தலைமை நீதிபதி எவ்வாறு அழைக்கப்பட்டார்.
   1. வாலி
   2. காதிப்
   3. ஸாஹிபுல் ஹராஜ்
   4. காழி
31. வாலி என்பவர்
   1. ஆளுநராவார்
   2. காதிபுத் தீவான் ஆவார்
   3. ஸாஹிபுல் ஹராஜ் ஆவார்
   4. காழியாவார்
32. ஹிஜ்ரி கலண்டர் எந்த கலீபாவின் ஆட்சிக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
   1. அபூபக்கர் (ரழி)
   2. உமர் (ரழி)
   3. அலி (ரழி)
   4. உஸ்மான் (ரழி)
33. ஹலீபா உஸ்மான் (ரழி) எப்போது பிறந்தார்கள்
   1. கி.பி.576ல்
   2. கி.பி.580 ல்
   3. கி.பி.573ல்
   4. கி.பி.570ல்

34. துன்னூரைன் எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட ஸஹாபி
1. அபூபக்கர் (ரழி)
2. உமர் (ரழி)
3. அலி (ரழி)
4. உஸ்மான் (ரழி)

35. கலீபா உமர் (ரழி) வை தாக்கியவன்
1. அபூஜஹ்ல்
2. அபூலஹப்
3. அல் மன்ஸுர்
4. அபூலு.'.லூஆ

36. கலீபா உமர் (ரழி) எத்தனையாவது வயதில் மரணித்தார்கள்.
1. 80
2. 83
3. 82
4. 85

37. கலீபா உமர் (ரழி) தமது ஆட்சியில் மேற்கொண்ட பணிகளில் ஒன்று
1. கடற்படையை உருவாக்கல்
2. ஆட்சி விஸ்தரிப்பு
3. அல் குர்ஆன் ஆனைப் பாதுகாத்தல்
4. மேற்கூறிய யாவும் சரியாகும்

38. அஷரதுல் முபஷ்ஷராவில் உள்ளடங்காதவர்?
1. அலி(ரழி)
2. உமர் (ரழி)
3. அபூபக்கர் (ரழி)
4. இக்ரிமா (ரழி)

39. ஹலீபா உமர் (ரழி) எப்போது இஸ்லாத்தை ஏற்றார்கள்?
1. நுபுவ்வத் 5
2. நுபுவ்வத் 6
3. நுபுவ்வத் 7
4. நுபுவ்வத் 10

40. ஷிர்க்கின் எதிர்ப்பதம் என்ன?
1. குப்ர்
2. ஈமான்
3. கபூல்
4. இஸ்லாம்

## பகுதி 11

## முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கு விடை தருக

### 01) சுருக்கமனா விடை தருக

01) முஆமலாத் என்றால் என்ன?
02) தவக்குல் என்றால் என்ன?
03) மூஸா அலைக்கு வழங்கப்பட்ட அற்புதம் ஒன்று தருக?
04) ஸுன்னா என்றால் என்ன?
05) இஸ்லாத்தின் மூலாதாரங்கள் எத்தனை வகை? அவை எவை?
06) இஜ்திஹாத் என்றால் என்ன?
07) பிக்ஹ் துறை இமாம்கள் இருவரைத் தருக?
08) இமாம் ஷாபிஈ (ரஹ்) எழுதிய நூல்கள் 2 ஐத் தருக
09) பின்வரும் சொற்களின் தமிழ் கருத்தைத் தருக
    1. ஸீரா    2. ஹிலாபத்
10) கலீபா உமர் (ரழி) தமது ஆட்சியில் மேற்கொண்ட பணிகள் 2 தருக?

**(20 புள்ளிகள்)**

### 02)

1. நுபி (ஸல்) அவர்களின் வாழ்வு பற்றி ஆய்ஷா (ரழி) எவ்வாறு கூறினார்கள்? **(2 புள்ளிகள்)**
2. நல்லொழுக்கம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தினை சுருக்கமாக விளக்குக? **(4 புள்ளிகள்)**
3. சிறு குறிப் பெழுதுக
    1. பொறுமை    2. மன்னிப்பு

**(4 புள்ளிகள்)**

### 03)

01) இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்கள் எவை? **(2 புள்ளிகள்)**
02) அல் குர்ஆனின் அற்புதம் பற்றி சிறிது விளக்குக? **(4 புள்ளிகள்)**
03) ஷரீஅத் சட்டங்கள் மனிதனுக்கு பாதுகாப்பளிப்பதில் எவ்வாறு பங்கு கொள்கின்றது? **(4 புள்ளிகள்)**

### 04)

01) ஸுன்னாவைப் பாதுகாப்பதில் நபிகளார் மேற் கொண்ட 3 நடவடிக்கைகளைத் தருக? **(2 புள்ளிகள்)**
02) அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தாவில் உள்ளடங்கும் கிரந்தங்கள் எவை? **(4 புள்ளிகள்)**
03) ஸஹாபாக்களும் தாபிஈன்களும் சுன்னாவைப் பாதுகாப்பதில் எவ்வாறு பங்காற்றினார்கள்? **(4 புள்ளிகள்)**

### 05)

01) இஜ்திஹாத் எந்த அடிச் சொல்லிலிருந்து பிறந்தது அதன் தமிழ் அர்த்தத்தைத் தருக? **(2 புள்ளிகள்)**
02) நபி (ஸல்) இஜ்திஹாதுக்கு அனுமதி வழங்கியதற்கான 2 ஆதாரங்களைத் தருக? **(4 புள்ளிகள்)**
03) முஜ்தஹிதுகள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகளைப் பட்டியற் படுத்துக. **(4 புள்ளிகள்)**

### 06)

01) வரலாற்றில் தோன்றி நிலை பெற்ற மத்ஹப்கள் எத்தனை? அவை எவை? **(3 புள்ளிகள்)**
02) மத்ரஸதுல் அஸர் மத்ரஸதுர் ர.்.யு இரண்டிக்கிடையிலுள்ள வேறுபாட்டை விளக்குக? **(4 புள்ளிகள்)**
03) பிக்ஹ் கலை எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை சுருக்கமாக விளக்குக? **(3 புள்ளிகள்)**

### 07)

01) கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் துன்னூரைன் எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்ககப்பட்டதற்கான காரணம் என்ன? **(2 புள்ளிகள்)**
02) கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் தமது ஆட்சியில் மேற்கொண்ட பணிகளைச் சுருக்கமாக விளக்குக? **(4 புள்ளிகள்)**
03) அல் குர்ஆனைப் பாது காப்பதில் உஸ்மான் (ரழி) மேற்கொண்ட பணியை விளக்குக? **(4 புள்ளிகள்)**